33

6 -SEP 1923

உ

மகாத்மா காந்தி

அருளிச்செய்த

தீண்டாமை விலக்கு.



ந்தரம் பிள்ளை, எம்.ஏ., பி.எல்.,

ழி பெயர்ப்பு.

நுரு
N23
172885

மகாத்மா காந்தி

அருளிச்செய்த

தீண்டாமை விலக்கு.

6 -SEP 1923

திருநெல்வேலி ஜில்லா

காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி

திரு. போ. திரிகூட சுந்தரம் பிள்ளை, யம்-ஏ, பி-எல்.

மொழிபெயர்ப்பாசிரியர்.

பதிப்பாசிரியர்

பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை,

சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

மூன்றணா. துந்துபி௵

41267

172885
சென்னை-600 008

301.15
1063

முகவுரை.

மகாத்மா காந்தியின் திருநாமம் தமிழ் நாடெங்கும் விளங்கி வருவது யாவரும் அறிந்த விஷயம். ஆயினும் அவர் பல விஷயங்களைப் பற்றி எழுதிவந்த அரிய வியாசங்கள் முழுவதையும் வாசித்து, அவருடைய கொள்கைகளையும் கருத்துக்களையும் அறிந்திருப்பவர் சிலரே. அச்சிலரும் ஆங்கிலம் கற்றவர்களே யாவர். ஆங்கிலம் அறியாதவரில் சிலர் அவ்வியாசங்களின் சில பாகங்களைமட்டும் தமிழ்ப் பத்திரிகைகளில் படித்தும், தலைவர்களின் பிரசங்கங்களில் கேட்டும் அவருடைய கொள்கைகளை அரைகுறையாக அறிந்திருப்பர். ஏனைய தமிழர்களுக்கு மகாத்மாவின் உபதேசங்கள் முழுவதையும் படித் துணர்ந்துகொள்ளும் பாக்கியம் கிடைக்க வில்லை. தமிழ் நாட்டிலுள்ள சகோதர சகோதரிகள் அனைவரும் மகாத்மாவின் ஹிதோப தேசங்களை வாசித் தறிந்து, அவற்றின்படி ஒழுகித் தூய வாழ்க்கை பெற்று உய்ய வேண்டுமென்பது எனது விருப்பம். ஆதலின், ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் மகாத்மா எழுதியுள்ள வியாசங்கள் குறிப்புகள் அனைத்தையும் தமிழில் மொழிபெயர்த்துத் தனித்தனிப் புத்தகங்களாக சொற்பவிலையில் வெளியிட உத்தேசித் திருக்கின்றேன். எனது உத்தேசம் இனிது நிறைவேறுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சு கின்றேன்.

திருநெல்வேலி,
சிந்துபூந் துறை,
துந்துபி பங்குனி.

போ. திரிகூட சுந்தரன்.

மகாத்மா வாக்கு.

யுதிஷ்டிரர் தமது நாயுடனன்றி, சுவர்க்கத்தில் நுழைய மறுத்தார். யுதிஷ்டிரர் சந்ததியில் வந்தோர் தீண்டாத் தகாதோரை விடுத்து எவ்வாறு சுயராஜ்யம் பெற எதிர் பார்க்கின்றனர்?.

* * *

நான் மறுபடியும் பிறந்தால், தீண்டத் தகாதவர்களே, அவர்கள் இருக்கும் பரிதாப நிலையினின்று விடுவிப்பதற்காக, அவர்கள் படும் துன்பங்களையும் அவர்கள் கேட்கும் வசைச் சொற்களையும் ஏற்றுக் கொள்வதற்காக, நானும் ஒரு தீண்டத் தகாதவனைப் பிறக்க விரும்புகின்றேன்.

* * *

தீண்டத் தகாத சகோதரர்களே, உங்கள் வாழ்க்கையை நீங்கள் புனித மாக்கிக் கொள்ள வேண்டும். உங்களை யாரும் குறை கூறு வண்ணம் பரிசுத்தமான வழக்கங்களை உங்களிடம் விருத்தி செய்து கொள்ள வேண்டும். உங்களில் சிலரிடம் குடி முதலிய கெட்ட வழக்கங்கள் இருக்கின்றன. அவற்றை உடனே விட்டொழிக்க வேண்டும். உங்கள் சுத்தத்தைப் பார்த்து மற்ற இந்துக்கள் வெட்கப் படும்படி நீங்கள் செய்ய வேண்டும்.

தீண்டாமை விலக்கு

1

விவேகாநந்த ஸ்வாமிகள் பஞ்சமர்களைத் "தாழ்த்தப்பட்ட" வகுப்பினர் என்று சொல்வது வழக்கம். ஸ்வாமிகளின் பதம் சரியான பதமென் பதில் சந்தேக மில்லை. நாம் அவர்களைத் தாழ்த்தி யிருக்கிறோம்; அதனால் நாமும் தாழ்ந்திருக்கிறோம். நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தில் பறையர்களாய் விட்டது, காலஞ் சென்ற ஸ்ரீமான் கோக்கலே கூறிய படி, நீதிக் கடவுளின் தண்டனை யாகும்.

இந்துக்களாகிய நாம் நம் குறையை நீக்கு முன் ஆங்கிலேயரை அவர்களுடைய குறைகளை நீக்கச் சொல்வது தகுமா என்று ஒரு நண்பர் கேட்கிறார். இது ஒரு சரியான கேள்விதான். அடிமை ஜாதியில் பிறந்த ஒருவன் தன் அடிமைத் தனத்தை நீக்கிக் கொள்ளாமல், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை அடிமைத் தனத்தி னின்று விடுவிக்க முடியு மாயின், நான் இன்றே அவ்விதம் செய்வேன். ஆனால் அது முடியாத காரியம். அடிமைக்கு ஒழுங்கான காரியத்தைச் செய்யக்கூடச் சுதந்தரம் கிடையாது. அன்னிய சரக்குகள் இந்நாட்டில் இறக்குமதி யாகாமல் செய்வது ஒழுங்கான காரியமே; ஆனால் அதைச்செய்ய எனக்குச் சக்தி கிடையாது. உண்மையான தேசியச் சட்டசபை

என் கைவசம் இருப்பின், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கெனத் தனியாக நல்ல கிணறுகளும், அவர்கள் குழந்தைகள் அனைவரும் கற்பதற்கு வேண்டிய மட்டும் நல்ல பள்ளிக் கூடங்களும் கட்டி இந்துக்களின் அகங்காரத்தையும் குறும்பையும் அடக்குவேன். ஆனல் அத்தகைய நல்ல நாள் வரும் வரை நான் காத்திருக்க வேண்டும்.

ஆகவே, இடைக் காலத்தில் அவர்களே தங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டியவைகளைச் செய்து கொள்ள வேண்டியதெனச் சும்மா இருப்பதா? அப்படி ஒன்றும் இல்லை. பஞ்சம சகோதரர்களுக்கு என்னல் இயன்றதை; எனக்கு இயன்ற முறையில் செய்திருக்கிறேன்; செய்து கொண்டுமிருக்கிறேன்.

அவர்கள் முன்னேற்றத்திற்கு மூன்று வழிகள் உண்டு. அவசரப்பட்டார்களேயானல், அடிமையான வன் முதலாளியாகிய அரசாங்கத்தின் உதவியை நாடலாம். அவர்களுக்கு அது கிடைக்கவுஞ் செய்யும். ஆனல் அப்படி நாடுவது பொறிக்குஞ் சட்டியை விட்டுத் தீயில் விழுவதை ஒக்கும். இப்பொழுது அவர்கள் அடிமைகளுக்கு அடிமைகளாய் இருக்கிறார்கள். அரசாங்க உதவியை நாடினல், அவர்கள் நெருங்கிய பந்துக்களாகிய இதர இந்தியர்களைத் தாழ்த்த உபயோகப்படுத்தப் படுவார்கள். தீமை செய்யப்பட்டவர்களாயிருப்பதுபோக, தாங்களே தீமை செய்பவர்களாவார்கள். முஸ்லீம்கள் இந்த வழியைப் பின்பற்றிப் பார்த்தார்கள்; தோல்வியே அடைந்தனர். முன்னிருந்ததை விடக் கேவலமான நிலையையே யுற்றனர். சீக்கிய

ரும் தங்களை அறியாமலே இவ் வழியைப் பின்பற்றி அபஜப மடைந்தனர். தற்காலம் இந்தியாவில் சீக்கியரிலும் திருப்திக் குறைவுற்ற வகுப்பினர் கிடையாது. ஆகையால் தாழ்ந்த வகுப்பினர் முன்னேற்றத்திற்கு அரசாங்க உதவி உபயோக மற்றது.

இரண்டாவது வழி; அவர்களெல்லோரும் இந்து மதத்தை நீத்து இஸ்லாம் அல்லது கிறிஸ்துவ மதத்தைத் தழுவுதலாம். உலக வாழ்க்கையின் நன்மைக்காக மதத்தை மாற்றிக்கொள்ளுதல் நியாயமென்றால், மனத்தாங்கலின்றி நான் அதை ஆதரிப்பேன். ஆனால் மத மென்பது இருதய வுணர்ச்சியைப் பொறுத்த விஷயம். தான் பிறந்த மதத்தை விடுவதற்கு வாழ்க்கையின் அசௌகரியங்கள் சரியான காரணமாக மாட்டா. ஆனால்; மதமென்பதைப் பிரமாதப்படுத்தி அதிலுள்ள ஒவ்வொரு வழுவையும் சரியென நான் சொல்லமாட்டேன். ஆகையால் பஞ்சமர்களை மனித சுபாவத்திற்கு விரோதமாய் நடத்துவது இந்து மதத்தில் ஒரு பாகமானால் இந்து மதத்தை நீக்கவேண்டுவது அவர்களுக்கும் என்போன்ற கொள்கை யுடையவர் களுக்கும் முக்கிய கடமை யாகும். ஆனால் தீண்டாமை இந்து மதத்தில் ஒரு பாகமில்லை என்று நம்புகின்றேன். அது எல்லோரும் எல்லா முயற்சிகளாலும் ஒழிக்க வேண்டியதான இந்து மதத்தையொட்டிய அழுக்கேயாகும். இந்து மதத்திலுள்ள அந்தக் குறையை யொழிக்க, இந்து சீர் திருத்தக்காரர் பெருந் தொகையினர் கங்கணம் கட்டிக்கொண் டிருக்கின்றனர். ஆகையால் மதத்தை மாற்றிக்கொள்ளுதலும் மருந்தாகாது.

முடிவில் அவர்களுக்குள்ள வழி தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ளுவதும் பஞ்சமரல்லாத இந்துக்கள் தாங்களாக, தர்மமாகவன்றிக் கடமையாக எண்ணிச் செய்யும் உதவியைப் பெறுவதுமே. இங்குதான் ஒத்துழையாமை அம்சம் தலைகாட்டுகின்றது. தீயதே என்று சகலரும் ஒப்புக்கொள்ளும் இத்தீண்டாமையை ஒழிக்க, ஒழுங்கானபடி நடத்தப்படும் ஒத்துழையாமையை நான் ஆதரிப்பேன். ஆனால் ஒத்துழையாமை என்பது பிறர் உதவியின்றிச் சுதந்தரமாயிருத்தல்; அதாவது தாமே தம் கார்யத்தை நடத்திக் கொள்ளலாகும். வரக்கூடாதென்று தடுக்கப்பட்ட இடங்களில் போகவேண்டுமென வற்புறுத்துதல் ஒத்துழையாமையல்ல; அது பலாத்காரமின்றி நடத்தப்படின் சாத்வீக மறுப்பாகலாம். ஆனால் சாத்வீகமறுப்பிற்கு அதிகமான அநுபவமும், தன்னடக்கமும் அத்யாவசியமென்று விசனத்துடன் அறிந்திருக்கிறேன். எல்லோரும் ஒத்துழையாமல் இருக்கலாம். ஆனால் வெகு சிலரே சாத்வீக மறுப்பில் இறங்க முடியும். ஆகையால் பஞ்சமர்கள் தங்கள் குறைகள் நிவர்த்திக்கப் படும் வரை இதர இந்துக்களுடன் யாதொரு வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளாமல் இருக்கக்கூடும். ஆனால் அப்படிச் செய்வதற்கு கட்டுப்பாடும், அறிவும் சேர்ந்த முயற்சிவேண்டும். நான் அறிந்தமட்டில், ஒத்துழையாமை மூலமாய் வெற்றி யடையும்படி செய்யத்தக்க தலைவர் ஒருவரும் அவர்களுக்குள் இல்லை.

ஆகையால் இப்பொழுது அரசாங்கத்தின் கீழ் வாழும் அடிமைத் தனத்தினின்று விடுதலை பெறுவதற்

காகத் தோன்றியுள்ள இந்த மகத்தான தேசீய இயக்கத்தில் பஞ்சமர்களும் மனப் பூர்வமாய்ச் சேர்ந்து உழைப்பதே சிறந்த மார்க்கமாகும். தீமையைச் செய்துவரும் இந்த அரசாங்கத்தோடு ஒத்துழையாதிருத்தல் என்பது இந்திய ஜாதியிலுள்ள பல்வேறு வகுப்பினரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தலையே பொறுத்திருக்கிறதென்ற விஷயத்தைப் பஞ்சம நண்பர்கள் அறிந்து கொள்ளவேண்டும். ஒத்துழையாமை இயக்கம் ஜெயம் பெற வேண்டுமாயின், முஸ்லீம்களோடு ஒன்று சேருவதுபோல் பஞ்சமரோடும் ஒன்று சேரவேண்டிய தவசியமென்பதை இதர இந்துக்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒத்துழையாமை இயக்கம் பலாத்காரத்தினின்று அறவே நீங்கியபொழுது, தன்னைத்தான் புனிதப்படுத்திக் கொள்ளும் இயக்கமாகும். அவ்விதம் புனிதப்படுத்திக் கொள்ளுதல் ஆரம்பித்துவிட்டது. பஞ்சமர்கள் தாமாக வந்துசேர்ந்தாலும் சேராவிட்டாலும், இதர இந்துக்கள் தங்கள் முன்னேற்றத்தைத் தடுக்க விரும்பார்களாயின் பஞ்சமர்களை அலட்சியஞ் செய்யத் துணியமாட்டார்கள். ஆகையால்தான் பஞ்சமர்கள் முன்னேற்ற விஷயம் எனக்கு உயிரைப்போல் அருமையாயினும், தேசீய ஒத்துழையாமையில் மட்டும் கவனத்தைச் செலுத்துவதில் திருப்தியுற்றிருக்கிறேன்.

2

ஸ்வராஜ்யம் அடைவதற்கு இந்து மதத்திலுள்ள தீண்டாமை என்னும் குறையை நீக்கவேண்டியது அவசியம் என்று தேசிய மகாசபை தீர்மானித்தது

நல்ல காரியம். சாத்தான் தன் சகாக்களிட மிருந்து கிடைக்கும் உதவிகொண்டே ஜய மடைகிறான். எப்பொழுதும் நம்மிடமுள்ள குற்றங்கள் மூலமாகவே சாத்தான் நம்மை அடிமையாக்கி அடக்கி யாள்கிறான். அதுபோலவே அரசாங்கமும் நம்முடைய குற்றங் குறைகள் மூலமாகவே நம்மீது ஆட்சி செலுத்துகின்றது. அதன் சூழ்ச்சிகளுக்கு வசப்படாமல் இருக்க விரும்பினால் நாம் நம் குறைகளை நீக்கிக் கொள்ள வேண்டும். அதனாலேதான் ஒத்துழையாமை இயக்கத்தை நம்மைப் புனிதமாக்கிக் கொள்ளும் இயக்கமென்று கூறி யிருக்கிறேன். சாக்கடைக் குழிகளை மண்ணால் நிறைத்து உலரவிட்ட உடனே கொசுகுகள் இறந்து விடுவதுபோல், நாம் நம்மை முழுதும் புனிதமாக்கிக் கொண்ட வுடனே இந்த அரசாங்கமும் அழிந்து போகும்.

தீண்டாமை என்னும் குற்றத்திற்குச் சரியான தண்டனை கடவுள் நமக்குத் தர வில்லையா? நாம் விதைத்தபடி அறுக்க வில்லையா? இந்தியரிடம் பஞ்சாபில் டயரும், ஓட்வியரும் நடந்துகொண்டதுபோல் நாமும் நம் சொந்த உறவினராகிய பஞ்சமரிடம் நடக்கவில்லையா? நாம் அவர்களைப் "பறைய"ரென்று சொல்லித் தொலையில் ஒதுக்கிவைத்தோம். நம்மையும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் உள்ளவர்கள் அவ்விதமே கருதித் தொலைவினில் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். பஞ்சமரை ஊர்ப் பொதுக்கிணறுகளை உபயோகிக்க வொட்டாமல் தடுக்கிறோம்; அவரிடம் நம் எச்சில் இலைகளை வீசி எறிகிறோம்; அவர் நிழல்கூட நம்மைத் தீட்டாக்கி விடுமென்கிறோம். சுருங்கச்

சொல்லின், ஆங்கிலேயரிடம் நாம் என்ன குற்றங்களை சொல்லுகிறோமோ, அதே குற்றங்களை நம்மிடம் பஞ்சமர் சொல்லக் கூடும்.

இந்து மதத்திலுள்ள இந்தக் குறையை எப்படி நீக்குவது? "மற்றவர்கள் உனக்கு என்னசெய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்" என்பது பெரியோர் வாக்கியம். ஆங்கில அதிகாரிகள் உண்மையில் இந்தியரின் நண்பராயும் ஊழியராயும் இருப்பரேல், தாங்கள் உயர்ந்தவர்கள், இந்தியரின் ரட்சகர் என்ற எண்ணத்தை விட்டு, எவ் விதத்திலும் நம்முடைய நண்பர் என்பதை அவர்கள் அன்பு மிக்க செய்கைகளால் நிரூபிக்க வேண்டும். எப்படி அவர்கள் ஆங்கிலேயரைத் தம் சமானஸ்தரெனப் பாவிக்கிறார்களோ, அப்படியே அவர்கள் நம்மையும் சமானஸ்தரெனப் பாவித்து நடத்த வேண்டுமென அடிக்கடி ஆங்கில அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். பஞ்சாப், கிலாபத் சம்பவங்களுக்குப் பின், அவர்கள் தாங்கள் செய்தது தவறென் றுணர்ந்து பச்சாத்தாபப் பட்டு தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும் அவர்களை நான் கேட்டிருக்கிறேன். அதுபோலவே இந்துக்களாகிய நாமும் பஞ்சமர்க்குச் செய்துவரும் தீங்கிற்குப் பச்சாத்தாபப்படவேண்டும். ஆங்கில ஆட்சி முறை எவ்விதம் அசுரத்தன்மை பொருந்தியதோ, அவ்விதமேயுள்ள ஒரு முறையால் நாம் அவர்களைத் தாழ்த்தியிருக்கிறோம். அவர்களிடம் நாம் நடந்துகொள்ளும் விதத்தையும் நாம் மாற்றிக் கொள்ளவேண்டும்; அவர்களிடம் நாம் உயர்ந்தவர்க

ளெனக் காட்டிக்கொள்ளக் கூடாது. அவர்களுக்கென்று சில உபயோகமற்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினால் மாத்திரம் போதாது. உண்மையில் அவர்கள் நம் சகோதரர்களா யிருப்பதுபோலவே, நாமும் அவர்களைச் சகோதரர்களாக பாவித்து நடத்தவேண்டும். ஆங்கிலங் கற்ற சீர்திருத்தக்காரர் சிலர் மட்டும் அப்படிச் செய்தால் போதாது. பொது ஜனங்கள் அனைவரும் அப்படிச் செய்ய வேண்டும்; அதுவும் அவர்கள் தாங்களாகவே செய்வது இன்னதென்று அறிந்து, செய்ததாய் இருக்க வேண்டும். வெகு நாளைக்கு முன்னரே செய்திருக்க வேண்டிய அந்தச் சீர்திருத்தத்திற்காக யுக முடிவுவரை நாம் காத்திருக்க முடியாது. இவ்வருஷ முடிவிற்குள்ளாகவே நாம் அதைச் செய்து முடிக்க முயல வேண்டும். இது ஸ்வராஜ்பத்திற்குப் பின் வரவேண்டிய சீர்திருத்தமல்ல; அவசியம் முன்வர வேண்டியதாகும்.

தீண்டாமைக்கு மத சம்மதம் யாதொன்றுங் கிடையாது. அது சாத்தானின் சூழ்ச்சியே. சாத்தான் எப்பொழுதும் வேதங்களினின்றும் மேற்கோள் காட்டுவான். ஆனால் வேதங்கள் அறிவையும் உண்மையையும் மீற முடியாது. அறிவைச் சுத்தப் படுத்தவும் உண்மையை விளக்கவுமே வேதங்கள் ஏற்பட்டன. குற்றமற்ற குதிரையொன்றை யாகத்தில் சுடுவது செய்யத் தகுந்த கார்யம் என்று வேதங்கள் சொல்லி யிருக்கின்றன என்றதனால் நான் அப்படிச் செய்யப்போவதில்லை. எனக்கு வேதங்கள் தெய்வீகந்தான், ஆனால் பொருளை விட்டு வெறும் மொழிகள் பயன்தர

மாட்டா. அறிவு கொளுத்துந் தன்மையது. வேதங்களின் பொருளே. மக்களை மேன்மையும், வீரமும் பொருந்தியவர்களாகச் செய்யும் தூய்மை, கற்பு, தெய்வத் தன்மை முதலிய சகல நற்குணங்களே வேதங்களின் பொருளாகும். யாதொரு குறையுங் கூறாமல் சுத்தஞ் செய்யும் தோட்டிகளை நாயினும் கடையராய் எண்ணிக் காறியுமிழ்வதும் வெறுப்பதும் மேன்மையுமன்று, வீரமுமன்று. அவர்கள் கட்டாயத்தின் மேல் தோட்டிகளாய் இருப்பதுபோல், நாமும் சுயேச்சையாய் மகா ஜனங்களின் தோட்டிகளாய் இருப்பதற்கு வேண்டிய தைர்யத்தையும் ஞானத்தையும் கடவுள் நமக்கு அளிப்பாராக.

3

தீண்டாமை இந்து மதத்தில் ஒரு பாகமில்லை யென நம்புகின்றேன். பாகமாயிருப்பின் அத்தகைய இந்து மதம் எனக்கு வேண்டாம். சாஸ்திரங்களின் பொருளைப்பற்றி வியாக்கியானமும் விவாதமும் செய்ய நான் விரும்பவில்லை. என் வாதத்தை நிலை நாட்ட பாகவதம், மனு ஸ்மிர்தி முதலிய சாஸ்திரங்களி லிருந்து மேற்கோள் எடுத்துக் காட்ட எனக்குக் கஷ்டமாயிருக்கலாம். ஆனால் நான் இந்து மதத்தின் உண்மையை அறிந்திருப்பதாய்க் கூறுகின்றேன். தீண்டாமை சரியானதென விதித்ததால் இந்து மதம் குற்றமிழைத்திருக்கிறது. அது நம்மைக் கேவலமாக்கி ஏகாதிபத்யப் பறையர்களாக்கி விட்டது. முஸ்லீம்களும் நம்மிடமிருந்து இக் குற்றத்தைச் செய்யக் கற்றுக் கொண்டதால் தென் ஆப்ரிகா கிழாப்

பிரிக்கா, கானடா முதலிய வெளி நாடுகளில் இந்துக்களைப்போலவே அவர்களும் பறையரென மதிக்கப் படுகின்றனர். இத் தீங்கெல்லாம் தீண்டாமை என்னும் பாவத்தின் விளைவே.

தீண்டாமை தங்கள் மதத்தின் ஒரு பாகமென இந்துக்கள் வேண்டுமென்று சொல்லி, தங்களில் சில சகோதரரைத் தொடுதல் பாபமென நினைத்துக் கொண்டிருக்கும் வரை சுயராஜ்யம் அடைதல் முடியாது. யுதிஷ்டிரர் தம் நாயுடனன்றி சுவர்க்கத்தில் நுழைய மறுத்தார். யுதிஷ்டிரர் சந்ததியில் வந்தோர் எவ்விதம் தீண்டத் தகாதோரை விடுத்து சுயராஜ்யம் பெற எதிர்பார்க்கின்றனர்? என்ன குற்றங்களுக்காக அரசாங்கத்தைக் கண்டிக்கின்றோமோ, அதே குற்றங்களைத் தீண்டத் தகாதவரெனும் நம் சகோதரரிடம் நாம் செய்யவில்லையா?

நம் சகோதரர்களைத் தாழ்த்திய குற்றத்தை நாம் செய்திருக்கிறோம்; அவர்களை வயிற்றால் நகரச் செய்கிறோம்; மூக்கைத் தரையில் தேய்க்கவும் சொல்லுகிறோம்; நம் கண்களில் பொறி பறக்கக் கோபித்து ரயில் வண்டிகளினின்றும் வெளியே தள்ளுகிறோம். பிரிட்டிஷ் அரசாங்கம் இவைகளைவிட வேறென்ன குற்றங்களை நமக்கு அதிகமாகச் செய்திருக்கின்றது? இந்தக் குறையை நம்மிடமிருந்து நாம் நீக்கிக்கொள்ள வேண்டும். பலஹீனர்களையும், உதவி யற்றவர்களையும் நாம் காப்பாற்றுத வரையும், யார் மனமும் புண்படச் செய்ய நமக்குச் சக்தியுள்ளவரையும் நாம் ஸ்வராஜ்யத்தைப்பற்றி பேசுதல் வீணேயாகும். இதர இந்துக்

களையும், முகமதியர்களையும் யாதொரு பயமுமின்றி நசுக்கலாமென்று இந்துக்கள் அல்லது மகமதியர்களில் ஒருவன்கூட ஒரு கண மேனும் அகங்காரத்துடன் நினையாதிருப்பதே ஸ்வராஜ்யத்தின் தாத்பரியமாகும். இந் நிபந்தனை முற்றுப் பெறும்வரை, ஸ்வராஜ்யம் அடைந்தாலும் அதை மறுநிமிஷமே இழந்துவிடுவோம். பலஹீனர்களான நம் சகோதரர்களுக்குச் செய்யுங் கொடுமைகளைத் தவிர்க்கும் வரை நாம் மிருகங்களைவிட மேலானவர்கள் அல்ல.

ஆனால், எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கின்றது. துளசி தாசர் குதூகலமாய்ப் பாடி யிருப்பதும் ஜைன, வைஷ்ணவ மதங்களின் ஆதாரமாயிருப்பதும்; பாகவதத்தின் சாராம்சமா யிருப்பதும், கீதையின் ஒவ்வொரு ஸ்லோகத்திலும் ததும்பிக்கொண் டிருப்பதுமான அன்பு இந் நாட்டிலுள்ள பாமர ஜனங்கள் அனைவர் இருதயத்திலும் மெதுவாய் வேரூன்றி வருவதை இந்தியா முழுவதும் நான் சுற்றிவந்தபொழுது அறிந்தேன்.

இந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் இன்னும் உண்டாவதாகக் கேள்விப்படுகிறேன். இன்னும் அவர்களில் அநேகர் ஒருவருக்கொருவர் தீங்கு செய்வதில் தயங்குவதில்லை. ஆனால் முடிவில் அன்பும் அருளும் அதிகரித்தே யிருக்கின்றன. இந்துக்களும் தெய்வபக்தி யுள்ளவர்களாய்விட்டார்கள். கோர்ட்டுகள், சர்க்கார் பள்ளிக் கூடங்கள் இவைபோன்ற மாய்கைகளினின்றும் விழித்துக்கொண்டோம். நாம் யாரை எழுதப் படிக்கத் தெரியாதவர்க

ளென்றும் அறிவில்லாதவர்க ளென்றும் கருது கிறேமோ, அவர்கள் தாம் உண்மையில் படித்தவர்க ளென்பதை உணர்ந்து கொண்டேன். அவர்கள் நம்மை விட ஞானவான்கள்; அவர்கள் மனம் நம் முடையதைவிடப் பரிசுத்தமானது. ஜனங்களின் தற் கால மனப்பான்மையைச் சிறிது கவனித்தால் ஜனங் கள் ஸ்வராஜ்ய மென்பதற்கு ராம ராஜ்யம் அதாவது உலகில் பரம ராஜ்யத்தை ஸ்தாபித்தல் என்றே பொருள்கொண்டிருக்கின்றனர் என்பது தெளிவாய் விளங்கும்.

எனது தீண்டத்தகாத சகோதரர்களே! உங்கள் முன்னேற்ற விஷயம் ஜனங்களிடம் முன்போல அவ் வளவு கலக்கம் உண்டுபண்ணவில்லை. அது உங்களுக் குச் சிறிது சமாதானம் தரலாம். ஆனல் இதர இந் துக்களைப்பற்றி உங்களுக்குள்ள சந்தேகங்களை நீங் கள் ஒழித்து விட வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. உங்களுக்கு இவ்வளவு தீங்கு செய்தவர்கள் சந்தேகிக்கப்படாமல் இருப்பதற்குள்ள அருகதை யுடையவர்களா? "தீண்டத் தகாதவர்" தாழ்ந்தவர் அன்று; பிறரால் தாழ்த்தப் பட்டவர். அவ்விதம் தாழ்த்திய பிறரும் அதனுல் தாழ்த்தப்பட்டனர் என விவேகாநந்த ஸ்வாமிகள் கூறுவது வழக்கம்.

ஏப்ரல் மாதம் 6-ந்தேதி நெல்லூரில் இருந்தேன். அங்கே தீண்டத்தகாத ஜாதியினரைச் சந்தித்தேன். இன்று செய்வதுபோல் அன்றும் கடவுளிடம் பிரார்த் தனை செய்தேன். நான் பிறவாதிருக்கவும் விரும்ப வில்லை. ஆனுல் மறுபடியும் பிறந்தால், தீண்டத் தகாத

வர்களை அவர்க ளிருக்கும் பரிதாபகரமான நிலைமையி னின்றும் விடுவிப்பதற்காக அவர்கள் படும் துன்பங் களையும், அவர்கள் கேட்கும் வசைச் சொற்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டி நானும் ஒரு தீண்டத்தகாத வனாய்ப் பிறக்கவே விரும்புகிறேன், ஆகையால் நான் திரும்பிப் பிறந்தால் பிராமண குலத்திலாவது, க்ஷத் திரிய குலத்திலாவது, வைசிய குலத்திலாவது; சூத்ர குலத்திலாவது பிறக்காமல் ஆதி-சூத்ர குலத்திலேயே பிறக்க வேண்டுமென்று கடவுளிடம் நான் பிரார்த் தனை செய்து கொண்டேன்.

ஏப்ரல் மாதம் ஆறுந் தேதியை விட இன்று (ஏப்ரல் மாதம் பதிமூன்றுந்தேதி பஞ்சாபில் ஜாலியன் வாலாப் படுகொலை ஞாபகார்த்த நாள்) மிக கிலாக்கிய மான புண்ய நாள். ஆயிரக்கணக்கான நிரபராதிகள் கொலையின் ஞாபகத்தால் புனிதமாய நாள். ஆகை யால், என் ஆசைகள் பூர்த்தியாகாது, தீண்டத் தகாத வர்க்குச் செய்யும் சேவை முற்றுப்பெறாது, இந்து மதத்தை நான் அறிந்த வழிகளில் சரிவர அநுஷ்டிக் காது நான் இறந்துவிட்டால், நான் அவ்விதம் செய்வ தற்காக தீண்டத் தகாதவர் குலத்திலேயே பிறக்க வேண்டுமென்று நான் இன்றும் பிரார்த்தனை செய் தேன்.

தோட்டி வேலையில் எனக்கு விருப்பம் உண்டு. என் ஆஸ்ரமத்தில் 18-வயதான பிராமண வாலிபன் ஒருவன் ஆஸ்ரமத்திலுள்ள தோட்டிக்குச் சுத்தம் செய்வதற்கான வழிகளைக் கற்பிக்க விரும்பித் தானே தோட்டி வேலை செய்து வருகிறான். அச் சிறுவன்

ஆசாரச் சீர்திருத்தக்காரன் அல்லன். வைதீகத்திலே பிறந்து வைதீகத்திலேயே வளர்ந்தவன். கீதையைத் தினசரி ஒழுங்காய்ப் படிப்பவன். விசுவாசத்தோடு தினசரி சந்தியா வந்தனம் செய்துவருகிறான். என்னை விடக் குற்றமில்லாமல் சமஸ்கிருத ஸ்லோகங்களை உச்சரிப்பான். ஈஸ்வரனை வழிபடும் பொழுது அவனுடைய மெல்லிய இனிய குரல் கேட்போரைப் பரவச மாக்கி விடும். ஆனால், தான் தோட்டி வேலையை அழகுறச் செய்யக் கற்றுக் கொள்ளும் வரை, தன் ஞானம் நிறைவுறாதென்றும், ஆஸ்ரமத்திலுள்ள தோட்டி அவன் வேலையை நன்றாய்ச் செய்ய வேண்டுமென்றும் உணர்ந்து அவன் அவ்விதம் நடக்கிறான்.

தீண்டத்தகாத சகோதரர்களே! உங்கள் வாழ்க்கையை நீங்கள் புனிதமாக்கிக் கொள்ள வேண்டும். உங்களை யாருங் குறை கூறா வண்ணம் பரிசுத்தமான வழக்கங்களை உங்களிடம் விருத்திசெய்து கொள்ள வேண்டும். உங்கள் தேகத்தைச் சுத்தஞ் செய்து கொள்ள ஸோப் கிடையா விட்டால் உவர் மண்ணையாவது அல்லது சாதாரண மண்ணையாவது உபயோகியுங்கள். உங்களில் சிலரிடம் குடி முதலிய துர் வழக்கங்கள் இருக்கின்றன. அவைகளை உடனே விட்டொழிக்க வேண்டும். பிராமணர்களிடமும் அவைகள் இருக்கின்றனவே என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால், அவர்களை தீண்டத் தகாதவரென யாரும் சொல்வதில்லை. உங்களையே அவ்விதம் சொல்லுகிறார்கள். உங்கள் விடுதலையை மற்ற இந்துக்களிடமிருந்து ஒரு தயவாகக் கேட்காதீர்கள். இந்துக்கள் தங்கள்

சொந்த நன்மையை உத்தேசித்து அவர்களாகவே முன் வந்து உதவி புரிய வேண்டும். ஆகையால் உங்கள் சுத்தத்தைப் பார்த்து அவர்கள் வெட்கப் படும்படி நீங்கள் செய்யவேண்டும்.

நீங்களும் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள்; பாகவதமும் படிக்கிறீர்கள். ஆகையால் இந்துக்கள் உங்களைத் துன்புறுத்தினுல், குற்றம் இந்துமதத்திலில்லை; இந்து மதஸ்தரிடமே இருக்கின்றது என்று நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இதர இந்துக்கள் வைத்திருக்கும் அடிமைத் தனத்தினின்றும் விடுதலைபெற விரும்பினுல், நீங்கள் உங்களைச் சுத்தமாக்கிக் கொள்ள வேண்டும். குடி போன்ற துர் வழக்கங்களை விட்டொழிக்க வேண்டும்.

உங்கள் நிலைமையை உயர்த்திக்கொள்ள வேண்டுமானுலும், ஸ்வராஜ்யம் பெற வேண்டுமானுலும், நீங்கள் உங்களையே நம்பி யிருக்க வேண்டும். உங்களில் சிலர் ஒத்துழையாமையை ஆதரிக்கவில்லை யென்றும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு தான் கதிமோட்சம் அடைய முடியுமென நம்பி யிருக்கிறீர்களென்றும் கேள்விப்பட்டேன். இந்து மதத்தை விடுவதினுலாவது, அல்லது அன்னிய மனிதன் ஒருவனின் தயவை எதிர் பார்ப்பதினுலாவது உங்கள் குறைகளை நீங்கள் நீக்கிக்கொள்ள முடியாதென உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் விடுதலை உங்கள் கையிலேயே இருக்கிறது.

தேச முழுவதிலும் தீண்டத் தகாதவரோடு நான் பழகி யிருக்கிறேன். அவர்களும் இதர இந்துக்களும் அறியாத அளவிறந்த சக்திகள் அவர்களிட மிருப்ப

தாக அறிந்திருக்கிறேன். அவர்கள் அறிவு சாகுபடி செய்யாத நிலம் போல, அவ்வளவு நிர்மல மானது. நூல் நூற்கவும் நெய்யவும் கற்றுக் கொள்ளும்படி உங்களை வேண்டுகிறேன். அவைகளை உங்கள் தொழி லாகக் கைக் கொள்வீர்களாயின், உங்கள் தரித்திரம் பறந்தோடி விடும். தோட்டிகளை நீங்கள் வேறாகப் பாவிப்பதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. வக்கீல் உத்தியோகம், சர்க்கார் உத்தியோகம் இவ் விரண்டையும் போல அவர்கள் தொழிலும் மேன்மை பொருந்தியதே.

எவ்வளவு சுத்தமா யிருப்பதாய்ச் சொன்னாலும், எச்சில் இலை உணவை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. தான்யத்தை மட்டுமே பெறவேண்டும். அது வும் நல்ல தான்யமாயும், மரியாதையோடு தரப்பட்ட தாயும் இருக்கவேண்டும். நான் சொல்லிய தெல்லாம் நீங்கள் செய்யக்கூடுமாயின் நாலைந்து மாதங்களிலல்ல; நாலைந்து தினங்களிலேயே நீங்கள் விடுதலை பெற்று விடுவீர்கள்.

இந்துக்கள் இயற்கையில் பாபஞ் செய்யுங் குண ப்பிரிக்கா, ரல்லர். அவர்கள் அறியாமைப் படுகுழியில் அமிழ்ந்து கிடக்கின்றனர். இந்த வருஷத்திலேயே தீண்டாமை ஒழிந்துவிட வேண்டும். என்னை உயிருட னிருக்கச்செய்யும் ஆசைகளில் முக்யமானவை தீண் டத் தகாதவர் விடுதலையும், கோ சம்ரட்சணையுமாகும். இவ்விரு ஆசைகளும் முற்றுப்பெற்ற பொழுது ஸ்வ ராஜ்யம் கிடைக்கும். அதுவே எனக்கு மோட்சமு மாம். உங்கள் கதிமோட்சத்தைத் தேடிக்கொள்ள உங்களுக்குக் கடவுள் சக்தி அளிப்பா ராக.

சென்னை மாகாணத்தில்போல் வேறெங்கும் தீண்டத் தகாதவரெனப்படுபவர் அவ்வளவு கொடூரமாய் நடத்தப்படுவதில்லை. தீண்டத் தகாதவரின் நிழலே அசுத்த மாக்கிவிடுமாம். பிராமணர்களுடைய தெரு வழியேகூடப் போகக்கூடாதாம். பிராமண ரல்லாதாரும் அவ்விதமே நடத்துகின்றனர். இருவர்க்கு மிடையில் பஞ்சமர்கள் தூள் தூளாக நசுக்கப் படுகின்றனர். அப்படி யிருந்தும், சென்னை மாகாணம் பெரிய கோவில்களும், தெய்வ பக்தியும் நிறைந்த நாடாகவு மிருக்கிறது. நெற்றியில் பெரிய குறிகளையும், நீண்ட சிகையையும், ஆடை அதிகம் அணியாத சுத்தமான தேகங்களையும் பார்த்தால், அங்குள்ள ஜனங்கள் ரிஷிகள்போல் தோன்றுகின்றனர். ஆனால் அவர்களுடைய மதம் இந்த வெளித் தோற்றங்களிலேயே அடங்கிவிட்டது போல் காண்கிறது. சங்கரர், இராமானுஜர் ஆகிய மதாச் சார்யர்களைப் பெற்றெடுத்த அப் பூமியில், சுறுசுறுப்பும் உபயோகமுமுள்ள பஞ்சமர்கள் இவ்விதம் கொடுமையாக நடத்தப்படுவதின் காரணம் எனக்குப் புலப்படவில்லை. தென்னிந்தியாவிலுள்ள இந்துக்கள் தங்கள் சொந்த உறவினராகிய பஞ்சமர்களை அசுரத் தன்மையாக நடத்தினும், அத்தகைய இந்துக்களும் தங்கள் குற்றத்தை உணர்ந்து திருந்திவிடக் கூடுமென்ற நம்பிக்கை இன்னும் என்னை விட்டு அகல வில்லை. நம்மிடத்தி லிருந்து இந்தப் பாபச் செயலை ஒழித்தா லன்றி ஸ்வராஜ்யம் கிடையாதெனப் பெரிய கூட்டங்களில் தெளிவான வார்த்தைகளில் பன்முறை பகர்ந்திருக்கின்றேன்.

இந்திய ஜனங்களில் ஐந்திலொரு பங்கு தொகையினரை ஜன சமூகத்தினின்று குஷ்டரோகிகளைப் போல் புறம்பே ஒதுக்கி வைத்திருப்பதின் பயனைப், நாமும் உலகமெங்கும் அவ்வாறே நடத்தப்படுகிறோம் என்பதையும் அவர்களுக்குச் சொன்னேன். ஒத்துழையாமையால் ஆங்கிலேயர் மனம் மட்டும் மாற வேண்டுமென்பதில்லை. நம்முடைய மனமும் மாற வேண்டும். உண்மையில், நம்முடைய மனதின் மாறுதலையே முதலிலும், ஆங்கிலேயருடைய மனதின் மாறுதலைப் பின் நாளடைவிலுமே எதிர்பார்க்கிறேன், ஒரு வருஷத்திற்குள் யுகமாய் நீடித்திருந்த தீண்டாமை என்னும் பாவச் செயலையும் விட்டொழித்து ஆடைகளைக் கழற்றி எறிவது போல் குடிப் பழக்கத்தையும் அறவேவிட்டுப் பழைய கைத்தொழிலைக் கைக்கொண்டு 60 கோடி ரூபாய் பெறுமான துணியையும் தயாரித்து வரும் ஒரு ஜன சமூகம் புத்துயிர் பெற்ற ஜனசமுகமே. அப்படி இந்தியா புத்துயிர்பெற்றெழுதல் உலகத்திற்கே நன்மைபயக்கும்; நிரீஸ்வர வாதியையுங்கூடக் கடவுளின் உண்மையையும், அருளையையும், நம்பும்படி செய்யும். இந்தியா இவ்விதம் புத்துயிர் பெற்றெழுமாயின், அதன் ஸ்வராஜ்யமடையும் உரிமையை உலகில் எவரும் மறுக்கமுடியாது. நாம் நம் சகோதரர்களாகிய தீண்டத்தகாதவர்க்குச்செய்யும் பாபத்திற்குப் பச்சாதாபப் பட்டும், அன்னிய ஆடைகளை பகிஷ்கரித்தும் நடந்து கொண்டால், கன்னெஞ்சுடையவராகத்தோன்றும் ஆங்கிலேய உத்யோகஸ்தர்களே நம்மை சுதந்தரமும் வீரமும்பொருந்திய ஜாதியாரென வாழ்த்துவரென்று நான்தைரியமாய்ச் சொல்லமுடியும்,

இவ்வித மாறுதல் விரிவாய் யோசித்துச் செய்யும் எந்த உயிரற்ற செயலாலும் ஏற்பட மாட்டாது; ஆனால் கடவுள் அருள் இருந்தால் எளிதில் ஏற்படும். நம்மில் ஒவ்வொருவர் இருதயத்திலும் ஆச்சரியமான மாறுதலைக் கடவுள் உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறார் என்பதை யார் மறுக்கக் கூடும்? எது எப்படியானாலும், எங்கும் தம் தீண்டத்தகாத சகோதாரிடம் அன்பு பாராட்டுவதும்; வேதங்கள், உபநிஷதங்கள், பகவத்கீதையாகிய சாஸ்திரங்களிலும், சங்கரர், இராமானுஜராகிய மதாச் சார்யர்களின் உபதேசங்களிலும், எவ்வளவு கடையனுயினும் ஒரு மனிதனையேனும் தீண்டத்தகாவனென ஒதுக்கி வைக்க ஆதார மில்லை என்பதை; உண்மையான இந்து மதத்தை அறியாத இந்துக்களுக்குச் சொல்லுவதும் ஒவ்வொரு காங்கிரஸ் கார்யஸ்தருடைய கடமையாகும். ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் தீண்டாமை அஹிம்சா தர்மத்திற்கே நேர் விரோதமான தென்று வைதீகர்களிடம் வெகு சாந்தமாய் முறையிட வேண்டும்.

நாம் நம்மிடமுள்ள தீண்டாமை யென்னும் பழியை நீக்கி, தீண்டத் தகாதவரை கௌரவம் பொருந்திய நம் சகோதரரென நினைத்து நடத்த வேண்டும். அவர்களை மனத் தாங்கலோடு தொட்டுப் பயனில்லை; அவர்கள் அன்போடு தழுவி அவர்களுக்கு வேண்டிய சேவைகளைச் செய்ய வேண்டும். எப்படி அரசாங்கம் நமக்கிழைக்கும் பல கொடுமைகளுக்கும் உண்மையாய்ப் பச்சாதாபப்பட வேண்டுமென்று விரும்புகிறோமோ, அப்படியே நாம் அவர்

களைத் தொடுவதும் நம் மெய்யான மனந்திரும்பு கைக்கு அறிகுறியாய் இருக்க வேண்டும். செய்யாமல் விலக்க முடியாத கார்ய மொன்றை அரை மனத்தோடு செய்தல் கடவுளுக்குப் பிரியந் தர மாட்டாது. இருதயம் முழுவதுமே மாற வேண்டும். பள்ளிக் கூடங்களில் அவர்களை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். பொது இடங்களில் அவருடன் நாம் கலந்து கொள்ள வேண்டும். வியாதியஸ்தனான சகோதர னொருவனை எவ்விதம் நாம் பேணுவோமோ, அவ்விதமே வியாதிஸ்தனான தீண்டத் தகாதவனையும் நாம் பேண வேண்டும். அவர்களுக்கு ஏதோ தானம் மட்டும் செய்தால் போதாது. அவர்களுக்கு விரோதமாக சாஸ்திர ஸ்லோகங்களின் பொருளைத் திரித்துச் சொல்லக் கூடாது. மனித உரிமைகளை ஒப்புக் கொள்ளாததும், சந்தேகிக்கத் தக்கதுமான ஸ்லோகங்களை சாஸ்திரங்களி னின்றும் நீக்கி விட வேண்டும். அறிவிற்கும், நியாயத்திற்கும், இருதய உணர்ச்சிக்கும் பொருத்த மில்லாத எந்த வழக்கத்தையும் மகிழ்வுடன் தள்ளி விட வேண்டும். லோபி தான் கெட்ட வழியில் ஈட்டிய பொருளைக் கட்டாயத்தின் பேரிலும்; கொடுத்தே தீரவேண்டு மென்ற சந்தர்ப்பத்திலும் மட்டுமேதருவான். அதுபோல் நாமும் கெட்ட வழக்கத்தை விடாமற் பிடித்துக் கொண்டிருந்து, பின் விட்டே தீர வேண்டு மென்ற பொழுது மட்டும் அதை விட்டு விடுவது பிசகான கார்யம். பரிசுத்தமான தியாகமே கடவுளுக் குகந்தது. இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகிய இரு மதங்களும் சோதனைக் குட்பட்டிருப்பது போலவே, இந்து மதமும் சோதனைக்

குட்பட் டிருக்கிறது. தீண்டாமையை ஒழிக்காவிடின் இந்துக்கள் என்பவர் உபநிஷதங்கள் உபதேசிக்கும் இந்து மதத்தின் உண்மையான பிரதிநிதிகளாக மாட்டார்கள். ஏனெனில் இந்து மதத்தின்படி கௌரவம் தருவது யோக்யதையைத் தவிர வேறொன்று மில்லை. அறிவிற்கும் அன்பிற்கும் ஒவ்வாததை அது ஒப்புக் கொள்வது மில்லை.

தீண்டாமை நம் முன்னேற்றத்திற்கு ஒரு கடக்க முடியாத பெருந் தடையா யிருக்கின்றது. அதைப் பெரு முயற்சி செய்து தகர்த் தெறிய வேண்டும். தீண்டாமையை ஒழியாமலே ஸ்வராஜ்யம் பெறக் கூடு மென நம்மில் அனேகர் உள்ளூற நினைத்துக் கொண் டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி நினைப்பதி லுள்ள முரண் பாட்டை அவர்கள் கவனிக்க வில்லை. ஸ்வராஜ்யம் தீண்டத் தகுந்தவர் தீண்டத் தகாதவர் இருவர்க்கும் ஒருங்கே வேண்டியது தான். ஆகை யால் பிறப்பு காரணமாய், சகோதரன் ஒருவனை ஜாதிப் பிரதிஷ்டனென நடத்தும் வரை, கடவுள் நம்மை ஸ்வராஜ்ய மடைய விடார். ஒருவன் இப் பொழுதிருக்கும் நிலைமைக்குக் காரணம், முற்பிறப்பில் அவன் செய்த கர்ம வினை எனக் கூறுகின்றனர். ஆனால் என் கர்மவினை பாவியின்மேல் கல்லெறியும்படி என்னைக் கட்டாயப் படுத்தாது. மதம் ஏற்பட்டது கர்ம வினையினின்று ஒருவனை விடுவிக்கவே யன்றி அதனால் நசுக்குவதற் கன்று. ஒருவன் கீழ் குலத்தில் பிறத்தல் அவன் கர்ம வினையின் பயன். ஆனால் அவனுக்கு விமோசன மில்லை என்று சொல்லுதல்

உயர்ந்த கர்மவினைக் கொள்கையைத் துர்ப்பிரயோகஞ் செய்வதாகும். ஸ்ரீ ராமபிரான் செம்படவன் (குகன்) ஒருவனால் உபசரிக்கப் படுவதை ஓர் கௌரமாகக் கருதினார். இந்து மதச் சரிதைகளில் அனேக மகான்கள் துரதிஷ்டமுள்ள தங்கள் சகோதரரை, துன்பங்களினின்றும் கை தூக்கி விட்டிருப்பதைக் காண்கிறோம். தற்காலமுள்ள இந்துக்கள் தங்கள் மூதாதையரைப் போல் நடக்க வேண்டாமா? இந்து மதத்தின் களங்கமாகிய தீண்டாமையைத் துடைக்க வேண்டாமா?

தீண்டாமை விலக்கு என்பதன் பொருள் ஐந்தாவது ஜாதியை யொழித்தல். ஆகையால் தொடுதலொன்றே தீட்டாகி விடும் எனக் கருதுதல் பிசகு என்பதும் அதில் அடங்கும். தீண்டத் தகாவர்க்குள்ள சுதந்திரம் தீண்டத் தகாதவர் தொட்ட ஜலத்தைத் தீட்டெனக் கருதக் கூடாது. ஆனால் அவன் சமைத்த உணவை உண்ண வேண்டுமென்பதில்லை. அது தீண்டாமை விலக்கைச் சேர்ந்த சீர்திருத்தம் அல்ல; ஜாதிக் கோட்பாட்டைச் சேர்ந்ததாகும். விவாகம், சமபந்தி போஜனம் முதலியவைகளைப் பற்றிய கட்டுப் பாடுகள் அனாவசியமாகும்; திருத்தி யமைக்க வேண்டியவையாயும் இருக்கலாம். ஆனால் நான் தீண்டாமையைக் கருதுவது போல், அவைகளையும் இந்து மதத்தின் மாசெனக் கருதவில்லை. மனிதர்களில் ஒரு வகுப்பினரை ஜனசமூகத்திற்குப் புறம்பே ஒதுக்கி வைக்கிறபடியால், தீண்டாமை ஒரு அசுரக் கொள்கையாகும்.

தீண்டாமை முற்றிலும் ஒழிந்து விட்டால், தோட்டிகள் குப்பை கலசு முதலிய அசுத்தங்களை அப்புறப் படுத்த வர மாட்டார்களென்று பயப்பட வேண்டியதில்லை. சரியான சம்பளங் கொடுத்து, மரியாதையாய் அன்புடன் நடத்தினால் அவர்கள் அவ் வேலையைச் செய்ய மறுக்க மாட்டார்கள். மேலும் உலகில் தீண்டத்தகாதவர் இல்லாத இடங்களிலும் இத்தொழில் இங்கு நடப்பதுபோல் சரியாகவே நடந்து வருகிறது. ஆனால் தோட்டிகள் தீண்டாமை ஒழிந்தவுடன் மேற்கண்ட வேலைகளைச் செய்ய மறுத்தால், நாமே அவைகளைச் செய்யத் தயாரா யிருக்க வேண்டும். எப்படித் தாயார் தன் குழந்தையையும், ஆபாள் தன் வியாதியஸ்தரையும் சுத்தஞ் செய்தல் பாபம் இல்லாத கார்யமோ, அப்படியே மற்றவர்க்காக மேற்கண்ட விதமாய் சுத்தஞ் செய்தலும் பாபமும் கேவலமு மில்லாத கார்யம் என்பதே தீண்டாமை விலக்கின் தாத்பர்ய மாகும்.

ஜாதி வித்தியாஸம்

1

இந்தியாவை அடிமைக் குழியில் அழுத்தியது ஜாதி வகுப்பேயென்றும், அதனால் ஜாதி வகுப்பை ஒழித்தாலன்றி இந்தியாவுக்கு நன்மை ஏற்படாதென்றும் சிலர் எண்ணுகின்றனர். தற்காலம் நாம் இருக்கும் நிலைமைக்கு நம்மைக் கொண்டு வந்தது ஜாதி வகுப்பல்லவென்பது என் அபிப்பிராயம். நம்மை அடிமைகளாக்கியது நம் பேராசையும், ஒழுக்கமின்மையுமே. இந்து மதம் கெட்டொழியாதிருப்பது ஜாதி வகுப்பாலேதான் என்பது என் நம்பிக்கை.

ஆனால் மற்ற ஏற்பாடுகளிற் போல், அதிலும் குறைகள் உண்டு. நான்கு வகுப்புகள் மட்டுமே ஆதாரமானவை, இபற்கையானவை, முக்யாம்சமானவை என்று நான் கருதுகிறேன். இதர உப ஜாதி வகுப்புகளெல்லாம் சில வேளைகளில் சௌகர்யமாயிருந்தாலும், அடிக்கடி தடையாகவே இருக்கின்றன. எவ்வளவு சீக்கிரமாக எல்லா வகுப்புகளும் ஒன்று சேருகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு நன்மை விளையும். உப ஜாதிகள் எப்பொழுதும் தோன்றுவதும் மறைவதுமாயிருந்திருக்கின்றன; இன்னும் அவ்விதமே இருந்து கொண்டிருக்கும். அவைகள் சம்பந்தமாய் பொது ஜனங்களே ஒரு முடிவுக்கு வந்து விடுவார்கள் என்று நம்பலாம்.

ஆனால் ஆதாரமாக வுள்ள நான்கு வகுப்புகளையும் அழிக்க முயன்றால் நான் நிச்சயம் எதிர்ப்பேன். ஜாதி வகுப்பு சமத்வ மின்மையை ஆதாரமாகக் கொள்ள வில்லை. அதில் உயர்வு தாழ்வு என்ற கேள்வியே கிடையாது. அவ்விதக் கேள்வி சென்னையிலும் மகராஷ்டிரத்திலும் எழுமானால், அதை உடனே தடுக்க வேண்டு மென்பதற்கு யாதொரு சந்தேகமும் கிடையாது. ஆனால் ஜாதி வகுப்பைத் துர்ப் பிரயோகஞ் செய்வது அதை ஒழித்துவிடப் போதுமான காரணமாக மாட்டாது. அதைச் சுலபமாகச் சீர்திருத்த முடியும். இந்தியாவிலும் உலகிலுள்ள இதர நாடுகளிலும் பரவி வரும் ஜன நாயக தத்துவம் ஜாதி வகுப்புகளின் உயர்வு தாழ்வு என்ற எண்ணத்தை ஒழித்து விடும் என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை.

ஜன நாயக தத்துவம் வெளித் தோற்ற மாறுதல்களால் சீர்படுத்தக் கூடிய ஒரு உயிரற்ற வஸ்து வல்ல. அதற்கு வேண்டியது மனம் சுத்தம் அடைவதே. அது பரவுதற்கு ஜாதி வகுப்பு தடையா யிருப்பின், இந்தியாவிலுள்ள ஐந்து மதங்களும் தடையேயாகும். சகோதர உணர்ச்சியைக் கற்பித்தலே ஜன நாயக வளர்ச்சிக்கு வேண்டியது. கிறிஸ்தவனை அல்லது முகமதியனை என் கூடப்பிறந்த சகோதரனைப் போல் கருத எனக்கு யாதொரு கஷ்டமு மில்லை. ஏனெனில் ஜாதி வகுப்பை ஏற்படுத்திய இந்து மதம் சகோதர தத்துவத்தையும் கற்பிக்கின்றது.

ஜன நாயக உணர்ச்சிக்குப் பல வகுப்பினர் ஒருவரோ டொருவர் உண்ணல், மணத்தல், ஆகியவை

172885
சென்னை-600 00

அவசியமானவை அன்று. எவ்வளவு அதிகமான ஜனநாயக உணர்ச்சி ஏற்பட்டுள்ள விடத்தும் உண்ணல், குடித்தல், மணத்தல் ஆகியவைகளில் எல்லோரும் ஒரே விதமாய் நடப்பார்களென்று நான் எண்ணவில்லை. எப்பொழுதும் வித்தியாசத்தில் தான் ஒற்றுமை காண முடியும். யாரிட மிருந்தும் தண்ணீர் வாங்கிக் குடியாதவனையும், உணவு வாங்கி உண்ணாதவனையும் பாபி யென்று நான் கருத மாட்டேன். இந்து மதப்படி சகோதரர்களுடைய புத்ர புத்ரிகள் ஒருவரை யொருவர் மணந்து கொள்வதில்லை. அதனால் அவர்களுக்குள் நேசப்பான்மை யில்லை யென்று சொல்ல முடியாது. அது நேசப் பான்மையை அதிகரிக்கின்ற தென்றே சொல்லலாம். வைஷ்ணவ குடும்பங்களில் தாய்மார் தங்கள் குழந்தைகளுடன் சாப்பிடாததையும், அப்படி யிருந்தும் அவர்கள் அன்பு குறையாமலும் அகங்கார மில்லாமலும் இருப்பதையும், நான் பார்த்திருக்கிறேன். இவ் வாசாரங்கள் அடக்கம் கற்பிப்பதற்காக ஏற்பட்ட கட்டுப்பாடுகள். அவைகளாகக் கெட்டவைக ளல்ல. ஆனால் அவைகளைப் பிரமாதப் படுத்தினால் தான், தீங்கு விளையும். அப்படிப் பிரமாதப் படுத்துவதற்கு உயர்வென்னும் அகங்காரம் காரணமா யிருப்பின், அக்கட்டுப் பாடுகள் கட்டுப்பாடென்பது போய்த் தீமையை உண்டு பண்ணும். ஆனால் நாளடைவில் புது அவசியங்களும் சந்தர்ப்பங்களும் ஏற்படும் பொழுது உடன் உண்ணல், உடன் குடித்தல், உடன் மணத்தலாகியவைகளைப் பற்றிய வழக்கங்களை யோசித்துத் திருத்தி யமைக்கவேண்டியது வருமென்பது நிச்சயம்.

இந்துக்கள் நான்கு ஜாதிகளாகப் பகுக்கப்பட்டிருப்பதை ஆதரிப்பதோடு; யாரேனும் அப் பாகுபாட்டை அழிக்க முயன்றால் எதிர்க்கவும் தயாராயிருக்கின்றேன். ஆனால் தீண்டாமையை மனித ஜாதிக்கே இழைக்குங் கொடுங் குற்றமெனக் கருதுகிறேன். அது தன்னடக்கத்திற் கான அறிகுறியல்ல; மேலெனக் கூறும் அகங்காரச் செயலேயாகும். அது யாதொரு நன்மையுந் தரவில்லை. எவ்விதத்திலும் நம்மை யொத்தவர்களும், தேசத்திற்குப் பல வழிகளிலும் முக்கியமான சேவை செய்து வருபவர்களுமான ஐந்து கோடி ஜனங்களை இந்து மதத்தில் வேறெதுவுஞ் செய்யாத விதமாய், அது நசுக்கி வருகின்றது. இந்து மதம் கௌரவம் பொருந்தியதும், மேன்மை யாக்குவது மான மதமெனக் கருதப்பட வேண்டுமானால், எவ்வளவு சீக்கிரமாகத் தீண்டாமை ஒழிக்கப் படுகின்றதோ அவ்வளவு நன்மை அதற் உண்டு. அதை வைத்துக் கொண்டிருப்ப [illegible] ற்கு
எனக்கு யாதொரு காரணமும் தோன்றவில் [illegible] தற்கு
கரமான ஏற்பாடொன்றை ஆதரிக்க [illegible] லை. பாப
பதமான சாஸ்திர சம்மதத்தைச் [illegible] ம். சந்தேகாஸ்
நான் தயங்க மாட்டேன். [illegible] தள்ளி விடுவதில்
அறிவிற்கும், மனச் சாட் [illegible] உண்மையில், தெளிந்த
பிரமாணங்களையும் [illegible] க்கும் விரோதமான சகல
பிரமாணமும் [illegible] நான் தள்ளி விடுவேன். எந்தப்
தால் பலவ [illegible] அறிவிற்கும் பொருத்தமானதா யிருந்
யும்; [illegible] னர்களைத் தாங்கி மேன்மை யுறச் செய்
ப [illegible] ஆனால் அது மனச் சாட்சியை மதித்து நடப்
ப [illegible] தத் தடுக்குமானால் அவர்களைத் தாழ்மைப்
[illegible] டுத்தும்.

ஜாதி வகுப்பு ஒரு தீங்கிழைக்கும் ஏற்பாடு என்று கருதாதவர்களில் நானும் ஒருவன். அது உற்பத்தியான காலத்தில் ஒரு நல் வழக்கமாயிருந்து தேசிய நன்மையை விர்த்திசெய்தது. என் அபிப்பிராயத்தில், உடன் உண்ணலும், உடன் விவாகஞ் செய்தலும் தேசிய முன்னேற்றத்திற்கு அவசியமானவை யென்று நினைப்பது மேல் நாட்டிலிருந்து வந்த ஒரு தப்பெண்ணமாகும். உலக வாழ்வில் ஆரோக்கியத்திற் கவசியமான இதர கார்யங்களைப் போலவே உண்ணலும் வெகு முக்கியமான செயல். மனித ஜாதி தனக்குப் பெருந் துன்ப முண்டாகும்படி உண்ணுதலை ஒரு பெருங் கார்யமாகச் செய்து விடாவிட்டால், வாழ்விற் கவசியமான இதர கார்யங்களை மறைவில் நடத்திக் கொள்வது போல், உண்ணுங் கார்யத்தையும் மறைவில் நடத்திக் கொள்வோம். மறைவில் நடத்தும் அவசியமான கார்யங்களில் உண்ணலும் ஒன்றெனக் கருதுவது இந்து மதத்தின் உயர்ந்த ஞானமு மாகும். ஒருவர் கூடப் பார்க்காத வண்ணம் மறைவில் சாப்பிடும் ஆயிரக் கணக்கான இந்துக்கள் இன்றைக்கும் இருக்கின்றனர். முற்றிலும் மறைவில் சாப்பிட்டாலும், ஒருவரிடமும் துவேஷங் கொள்ளாது எல்லாருடனும் எப்பொழுதும் நெருங்கிய சிநேக பான்மையுடன் வாழும் அறிவாளிகள் பலரை நான் அறிவேன்.

உடன் மணத்தல், பல வகுப்பினர் ஒருவரையொருவர் வகுப்பு வித்தியாசமின்றி விவாகஞ் செய்து கொள்ளுதல், இதை விடக் கஷ்டமான விஷயம்.

ஒருவரை யொருவர் மணந்து கொள்ள வேண்டு மென்ற எண்ணங் கொஞ்சமும் வராமல், சகோதரர் களும் சகோதரிகளும் வெகு நெருங்கிய சிநேகப் பான் மையோடு வாழ்ந்து வருவது யாவரும் அறிந்த விஷ யம். ஆகவே என் புத்திரியும் வேறொரு ஜாதியின ரும் சகோதர பாவத்துடன் வாழ்வதில் கஷ்ட மெது வும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. உண் ணல், மணத்த லாகியவை சம்பந்தமான ஆசைகளை எவ்வளவுக் கெவ்வளவு அடக்குகிறோமோ, அவ்வள வுக் கவ்வளவு பக்தியும் சன்மார்க்கமும் பொருந்திய வர்க ளாவோம். என் புத்திரியை விவாகஞ் செய்து கொள்ள எந்த வாலிபனுக்கும் உரிமை யுண்டென்ப தையும், நான் எவருடனும் உண்ணவேண்டிய தவசிய மென்பதையும் நான் ஒப்புக் கொள்ள முடியாது. ஒப்புக்கொண்டால், உலகினருடன் சகோதர பான் மையை விர்த்தி செய்வது ஒரு பொழுதும் முடியாத கார்ய மென்று விட்டுவிட வேண்டியது தான். ஆனல் நான் உலகினர் அனைவருடனும் சிநேக பான்மை யுடன் வாழ்ந்து வருகின்றேன். கிறிஸ்துவர், மகமதி யர் ஒருவரோடாவது நான் ஒருபொழுதும் சண்டை யிட்டதில்லை. அப்படி யிருந்தும் அநேக வருஷங்க ளாக நான் கிறிஸ்தவ, மகமதிய வீடுகளில் பழங்களைத் தவிர வேறெதுவும் சாப்பிட வில்லை. சமைத்த உணவை என் மகன் சாப்பிட்ட பாத்திரத்தில் சாப் பிடவும், என் மகன் வாய்ப்பட நீர் அருந்திய பின் சுத்தஞ் செய்யப்படாத பாத்திரத்தில் ஜலங் குடிக்க வும் நான் நிச்சயம் மறுப்பேன். ஆயினும் இவ்விஷ யத்தில் நான் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கட்டுப்

பாடுகள், கிறிஸ்தவர், மகமதியர்; என் மக்கள் அனைவருடன் நெருங்கிய தோழமை கொள்வதற்குச் சிறிதும் தடை செய்யவில்லை.

ஆனல் உடன் உண்ணல், உடன் மணத்தலாகியவை ஒற்றுமைக் குறைவும் சச்சரவும் வராமல் ஒரு பொழுதும் தடுத்ததில்லை. பாண்டவர்களும் கௌரவர்களும் உடன் உண்டும், உடன் மணந்தும் ஈவிரக்கமின்றி ஒருவர் கழுத்தை யொருவர் திருகுவதிலேயே கருத்தாயிருந்தது யாவரும் அறிந்ததே. ஆங்கிலேயர், ஜர்மானியர் இருவர்க்குமுள்ள மனக்கசப்பு இன்னும் ஒழிந்த பாடில்லை. உண்மையென்னவென்றல், உடன் உண்ணல், உடன் மணத்தலாகியவை நட்பிற்கும், ஒற்றுமைக்கும், அறிகுறிகளாயிருப்பினும் அவை உண்டாவற்கு அவசியமானவையன்று.

பிராமண ரல்லாதார்.

1

பிராமண ரல்லாதாருடைய இயக்கத்தையும் அவ் வியக்கத்தின் காரணங்களையும் நான் அறிந்திருக்கிறேன். நான் பிராமணர்கள் மீது குற்றமே கிடையாதென்று கூறவில்லை. அவர்களும் தாங்கள் குற்ற மற்றவர் என்று கூறிக் கொள்ளவில்லை. பிராமணர்கள் தங்களுடைய மதாசாரங்களை அலட்சியஞ் செய்துவிட்டார்கள்; தங்கள் புனிதமான வாழ்க்கையினின்றும் வழுவிவிட்டனர். அதனால் அவர்கள் தங்கள் உயர் பதவியினின்றும் கீழே விழுந்துவிட்டனர்.

அவர்கள் தாழ்வடைய ஆரம்பித்த காலந் தொட்டு இந்தியாவும் தாழ்வடைய ஆரம்பித்தது. நான் பிராமண ரல்லாதவருள் ஒருவன். தற்கால பிராமணர்கள் சீர்கேடுற்ற காரணத்தால், பிராமண ரல்லாத சகோதரர்களும் தங்கள் மதத்தையும் வாழ்க்கையின் முக்கிய நோக்கங்களையும் மறந்துவிடாம லிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பிராமணர்களால்தான் பிராமண ரல்லாதாரும் தங்கள் குறைகளை உணர்ந்து தங்கள் உரிமைகளைப் பெறவேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றனர் என்பதை அறியப் பலர் ஆச்சரியப்படுவர்.

பிராமணர்கள் எவ்வளவு சீர்கேடுற்றிருந்த போதிலும் அரசியல் இயக்கங்களிலும், ஆசாரச் சீர்திருத்த வியக்கங்களிலும் முதன்மையாக முன்னணியில் நின்று இப்பொழுதும் வேலைசெய்து வருகின்ற

னர். தாழ்த்தப்பட்ட ஜாதியினரின் உயர்வுக்காக எந்த வகுப்பினரைக் காட்டிலும் பிராமணர்களே அதிகமாக தேக சிரமமெடுத்து உழைத்துவருகின்றனர். தேச சேவை செய்ததற்காக லோகமான்ய திலகர் சகல வகுப்பினராலும் போற்றப் படுகின்றனர். ஆந்திர தேசத்தில் தீண்டா வகுப்பினர்க்கு ஊழியஞ் செய்வதற்காகவே ஒரு பிராமணர் தமது வாழ்நாட்களைச் செலவிட்டு வருகின்றார். காலஞ்சென்ற கோக்கலே, ரானடே ஆகியவர்கள் எல்லோரும் தாழ்ந்த வகுப்பார் மேன்மை யடைவதற்காக அரிய ஊழியஞ் செய்திருக்கின்றனர். இவர்க ளனைவரும் பிராமணர்களே. பிராமணர்கள் எக்காலத்தும் தங்களுடைய சுயநல தியாகத்திற்காகக் கீர்த்தி பெற்றிருக்கின்றனர் என்பதை நான் நன்குணர்ந் திருக்கிறேன்.

அதிகார வர்க்கத்திலுள்ள பிராமணர்கள்மீது குறை கூறப்படுகின்றது. பிராமண அதிகார வர்க்கத்தவரையும் பிரிட்டிஷ அதிகார வர்க்கத்தவரையும் நாம் ஒத்துப் பார்ப்போம். பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தவர் பிரித்தாளும் முறையைக் கையாண்டு ஆயுத பலத்தால் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றி வருகின்றனர். ஆனால் பிராமணர்கள் ஆயுத பலத்தை நாடிச்சென்றதே கிடையாது. அவர்கள் தங்கள் புத்திக் கூர்மையாலும், சுயநலத் தியாகத்தாலும், தவத்தாலுமே தங்கள் உயர்வை நிலைநாட்டி யிருக்கிறார்கள். பிராமணரை வெறுக்காமலும், அதிகாரி வர்க்கத்தவரின் வலைக்குட்சிக்காமலும் இருக்கும்படி நான் எனது பிராமண ரல்லாத சகோதரர்களை வேண்டிக் கொள்கிறேன்.

பிராமண ரல்லாத பணக்காரர் கையிலேயே விவ சாயமும், வியாபாரமும் இருக்கின்றன. அவர்கள் அரசாங்க உத்யோகங்களில் மோகங்கொண்டால் அவைகளையும் யாதொரு தடையுமின்றி அடைவதற் குரிய மார்க்கத்தை ஒத்துழையாமை இயக்கம் ஏற் படுத்தி யிருக்கின்றது. ஒத்துழையாமை இயக்கம் எல்லோருடைய நன்மைக்காகவுந் தான் ஏற்பட்டுள் ளது. அது பிராமணருக்கும், பிராமண ரல்லாதாருக் கும் ஒரே நன்மையைத்தான் விளைவிக்கும். பிரா மணரல்லாத என் சகோதரர்கள் இவ் விஷயங்களை யெல்லாம் நிதானமாக ஆலோசித்துப் பார்த்தால், நான் சொல்வன வற்றின் உண்மையை அறிவார்கள்.

பிரிட்டிஷார் நம்மை நடத்துவது எவ்விதம் அசு ரத்தன்மை பொருந்தியதோ, அவ்விதமே பிராமணர் கள் பிராமண ரல்லாதாரை நடத்துவதும் அசுரத் தன்மை பொருந்தியது என்பது என் அபிப்பிராயம். வீண் போராட்டமின்றி பிராமண ரல்லாதாரைச் சமாதானஞ் செய்யவேண்டும். ஆனால் நான் அப்ப டிச் சொல்வதை வைத்து மகாராஷ்டிரத்திலும் சென் னையிலுமுள்ள பிராமண ரல்லாதாரில் வலியவர்களா வது துஷ்டர்களாவது பிராமணர்கள் என்று சொல் லிக் கொள்பவரைப் பயமுறுத்த வேண்டுமென்பது என் நோக்கமல்ல. "சொல்லிக் கொள்பவர்" என் னும் பதங்களை அறிந்தே வேண்டுமென்று உபயோ கிக்கிறேன். ஏனெனில் வைதீக பந்தத்தினின்று விடு வித்துக்கொண்ட பிராமணர்களுக்கு, பிராமண ரல் லாதவர்களிடம் பிராமணரல்லாதவர் என்பதற்காக

யாதொரு துவேஷமும் இருக்காது. அதற்குப் பதிலாக, பலஹீனரா யிருக்கும்பொழு தெல்லாம் பிராமண ரல்லாதார் எவ்விதத்திலும் அவர்களை முன்னுக்குக்கொண்டுவரவே ஆசைப்படுகின்றனர். தேசபக்தன் எவனும் தன் தேசத்திலுள்ள எந்தத் தாழ்ந்த மனிதனையும் அலட்சியஞ் செய்யத் துணிந்தால், தேச முன்னேற்றத்தை ஒரு நாளும் விர்த்தி செய்ய முடியாது. ஆகையால் அரசாங்கத்தோடு சல்லாபஞ் செய்துகொண்டிருக்கும் பிராமணரல்லாதார் தங்களையும் தங்கள் ஜாதியினரையும் விற்பவர்க ளாவார்கள். அரசாங்கத்திடம் நம்பிக்கை யுள்ளவர்கள் அதைக் காப்பாற்ற உதவி செய்யட்டும், அதைத் தடுக்க வேண்டாம். ஆனல் இந்தியனுப்ப்பிறந்ததில் பெருமையடையும் எவனும் தன் முகத்தின் மீதுள்ள கோபத்தினல் மூக்கை அறுத்துக் கொள்ளம லிருக்கட்டும்.

பிராமண ரல்லாதார் விஷயம் பெரும்பாலும் ராஜீய விஷயத்தைச் சேர்ந்த தாகும். பிராமண ரல்லாதார் அனைவருமே பிராமணர் அனைவரையும் பற்றிக் குறை கூறவில்லை. குறை கூறுபவ ரெல்லாம் படித்த பிராமண ரல்லாதாரில் சிலரே; அவர்களும் பிராமண தேசிய வாதிகளைப் பற்றித்தான் குறை கூறுகின்றனர். பிராமண ரல்லாதாரில் தீண்டா வகுப்பினரும் அடங்குவர். ஆயினும் பிராமண ரல்லாதாரும் தீண்டத்தகாதவரை ஒதுக்கியே வைத்திருப்பதால், அவர்களைப் பற்றி தீண்டத் தகாதவர் குறை கூறுகின்றனர். படித்த பிராமண ரல்லாதாரிலும் அபிப்பிராய பேதங்கள் உண்டு. ஆயினும் அக்கட்சியார் சொல்வது பின் வருமாறு :—

1. ராஜீய அதிகாரம் பிராம்மணருக் கிருப்பது போல் படித்த பிராமணரல்லாதாருக் கில்லே. பிராமணரைவிட பிராமண ரல்லாதார் பெருந் தொகையினராயினும், பிராமணர்களே அரசாங்க உத்யோகங்களேயும், பிரதிநிதித்வ சபைகளில் ஸ்தானங்களேயும் வைத்துக்கொண் டிருக்கின்றனர்.

2. எவ்விதம் ஆங்கிலேயர் இந்திய ரனைவரையும் நடத்துகின்றனரோ, அவ்விதமே பிராமணர்களும் பிராமண ரல்லாத ரனைவரையும் சூத்திரரெனச் சொல்லி நடத்துகின்றனர்.

பிராமண ரல்லாதார் கட்சி சிறிதும் பல மற்றது என்பதும் காங்கிரஸ் ஒத்துழையாமைத் திட்டத்தை தேசியக் கட்சிப் பிராமணர்கள் முழுதும் நடத்திவைத்தால் போன ஜன வாழ்விலிருந்து அது தானுகவே மறைந்து விடுமென்பதும் என் அபிப்பிராயம்.

பிராமண ரல்லாதாருடைய இபக்கத்தின் மூலகாரணம் மத விஷயத்திலேனும் சமுகவாழ்விலேனும்அவர்களுக்கேற்பட்டஉரிமைக் குறைவல்ல; ராஜீய விஷயங்களில்பிராமணர்கள் முதன்மைபெற்றிருப்பதேயாகும் ஆனல் யோக்கியதையின் காரணமாவே பிராமணர்கள் முதன்மை பெற்றிருக் கின்றனர். பிராமண தேசிய வாதிகள் தாங்கள் ஸ்வராஜ்ஜியத்தைப் பற்றி விரிந்த நோக்கங்களே அடைந் திருப்பதின் காரணமாய், அரசாங்க உத்யோகங்கள் எல்லா வற்றையுந் துறக்கவும், சட்ட சபைகளேயும் முனிசிபல் சபைகளில் அதிகாரிகளால் தேர்ந்து நியமிக்கப்பட்ட (நாமினேட்டட்) ஸ்தானங்களேயும் பகிஷ்கரிக்கவுஞ் செய்வார்களே யானுல் பிராமண ரல்லாதாருடைய முறை

யிடு ஒழிந்தேதீரும். அரசாங்கமோ தான் ஏற்படுத்திக் கொண்ட ராஜ தந்திர முறைக் கிணங்க, பிராமணருக்கு எதிரியாக பிராமண ரல்லாதாரை அவர்களும் அறியாத வண்ணம் தூண்டி விடும். இரு திறத்தாருக்கும் சண்டை மூட்டியும், பிராமண ரல்லாதார்க்கு ராஜீய நன்மை செய்வதாய் ஆசை வார்த்தை காட்டியும் தன் வாழ்நாளை நீடித்துக் கொள்ள முயற்சி செய்யும். இதில் எனக்கு யாதொரு சந்தேகமும் தோன்ற வில்லை.

பிராமணர்கள் அரசாங்க ஆதர வனைத்தையும் ஒழுங்கான முறையில் உதறித் தள்ளி, பிராமண ரல்லாதாரின் எதிர்க்கட்சி வாதத்தை ஒழித்து விடுவார்களென்பதிலும் எனக்குச் சந்தேக மில்லை. ஆனல் பாமர ஜனங்களின் பிரதிநிதிகளும், அவர்கள் துன்பங்களை உணர்ந்து வருந்துபவர்களும் தாங்களே என்று சொல்லிக் கொள்ளும் பிராமண ரல்லாத தலைவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்தோ, அல்லது அரசாங்க உதவி கொண்டு தங்கள் நன்மையை நாடியோ, பாமர ஜனங்களை அரசாங்கம் நசுக்கி வருவதை அதிகப் படுத்தவே செய்வார்கள் என்பது தான் மிக்க துன்ப கரமான விஷயம். அரசாங்க உதவியை அவர்கள் எதிர் பார்ப்பதிலிருந்து, பஞ்சாப், கிலாபத் அநீதிகளுக்குப் பரிகாரந் தேடுவது கஷ்டமாகி விடும்.

பிராமண ரல்லாதார் தங்களுக்கு பிராமணர்களிடம் அல்லது தேசீய வாதிகளிடம் என்ன குறைகளிருந்தாலும் அதை நிவர்த்தித்துக் கொள்ளும் வழி பாமர ஜனங்களைப் பொருளாதாரத் துறையில்

கெடுத்து வாழ்வதையும், அதற்காக அவர்களை பல வீனர்களாக்கு எதையுமே முக்கிய கொள்கையாக வுடைய ஒரு அரசாங்கத்தோடு சிநேகஞ் செய்து கொள்வ தல்ல. ஏனெனில் பிரிட்டிஷ் கௌரவத்தை எவ்விதத்திலும் காப்பாற்ற வேண்டுமென்ற பிடிவாத மான கொள்கையினல்தான் பஞ்சாப், கிலாபத் அநீதிகளை நிவர்த்திக்க, அரசாங்கத்தார் மறுக்கின்ற னர். ஆனல் ஒரு லட்சம் ஆங்லேயர் ஆயுத பல மொன்றைக் கொண்டே முப்படி கோடி ஜனங்களை அடக்கி யாளுவ தென்பது முடியாத காரியம்.

ஆனல் அத்தனை ஜனங்களையும் வெகு சூட்சம மான முறையில் நாளுக்கு நாள் பலவீனர்களாக்கி வருவதன் மூலமாய், அரசாங்கம் தன் சக்திகளை ஒன்றுகத் திரட்டி. உறுதிப் படுத்திக் கொள்ள முடி யும்; அவ்விதம் செய்து கொண்டு மிருக்கிறது.

———

அநுபந்தம்.

மேற்கோள்.

1. பிராமணன் கடவுளுடைய வாய்; ராஜன் அவருடைய இரு புஜங்கள்; வைசியன் அவருடைய இரு தொடைகள்; சூத்ரன் அவருடைய இரு பாதங்களி லிருந்து பிறந்தான்.—ரிக் வேதம்.

சக்திகளையும்,செயல்களையும் வேறுவேறாய்ப் பகிர்ந்து கொடுத்த தன் மூலமாய் என்னிலிருந்து நான்கு ஜாதிகளும் உண்டாயின; நான்தான் அவைகளை உண்டாக்கியவன் என்பதை அறிந்துகொள்.-பகவத்கீதை.

3. கடவுள் தம் சிருஷ்டியைக் காப்பதற்காக தம் வாய், கை, தொடை, பாதம் ஆகியவைகளி னின்றும் பிறந்த பலர்க்கும் வேறு வேறு கர்மங்களை ஏற்படுத்தினர்.

வேதங்களைக் கற்றல், கற்பித்தல், யாகஞ் செய்தல், செய்வித்தல், தானஞ் செய்தல், பெறுதல், இவைகள் பிராமணருக்கு ஏற்பட்டவை.

குடி யோம்பல், தானஞ் செய்தல், யாக மியற்றல், வேத மோதல், விஷயங்களில் பற்றில்லாமை இவைகள் க்ஷத்திரியருக்கு ஏற்பட்டவை.

பசுக் காத்தல், தானஞ் செய்தல், யாக மியற்றல் வேத மோதல், வியாபாரம், நாணய வர்த்தகம், விவசாயம் இவைகள் வைசியருக்கு ஏற்பட்டவை.

மனத் தாங்கலின்றி மற்ற மூ வகுப்பினர்க்கும் சேவை செய்வ தொன்றையே கடவுள் சூத்ருக்குரிய கர்ம மாக விதித்தார்.—மனு ஸ்மிருதி.

ஓ பரந்தபா! பிராமண, க்ஷத்ரிய, வைசிய, சூத்ர ஜாதிகளில், அவரவர் இயற்கையால் உண்டான குணங்களுக்குத் தக்கவாறு கர்மங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சாந்தம், அடக்கம், தவம், சுத்தம், க்ஷமை, நேர்மை, ஞானம், அறிவு, பக்தி இவைகளே பிராமணனுக்கு இயற்கையாய்ப் பிறந்த கர்மங்கள்

தைர்யம், பெருந்தன்மை, உறுதி, தந்திரம், புறங்கொடாமை, கொடை, அரசு இவைகளே க்ஷத்திரியனுக்கு இயற்கைத் தன்மையால் பிறந்த கர்மங்கள்.

விவசாயம், பசுக்களைப் பாதுகாத்தல், வியாபாரம், இவைகளே வைசியனுக்கு இயற்கையாய்ப் பிறந்த கர்மங்கள்.

சேவையே சூத்திரனுக்கு இயற்கையாய்ப் பிறந்த கர்மம்.—பகவத் கீதை.

5. கௌதமர் சத்ய காமனிடம் சொன்னார்:—"பிராமணனைத் தவிர வேறெவரும் இவ்விதம் உண்மையை உரையார்; ஆகவே நீயும் பிராமணனே. ஆகையால் உனக்கு தீட்சைசெய்துவைப்பேன்.—சாந்தோக்ய உபநிஷதம்

மர யானையைப் போலவும், தோல் மானைப் போலவுமே படியாத பிராமணனும். இம் மூவர்க்கும் பெயர் மாத்திரமே உண்டு.

வேதங்களைப் படியாமல் வேறிடத்தில் வேலைபார்க்கும் பிராமணன் இந்த ஜன்மத்திலேயே தானும் தன் சந்ததியாருடன் சூத்ரன் ஆகின்றான்.—மனு ஸ்மிருதி.

7 நாக ராஜனே! உண்மை, தானம், க்ஷமை, ஒழுக்கம், அன்பு, தவம், அருள் முதலியன எவனிடம் காணப்படுமோ, அவனே பிராமணன் என்று சொல்லப் படுபவன்.

இவை பிராமணனிடம் காணப் படாமல் சூத்திரனிடம் காணப் பட்டால் பிராமணன் பிராமணன் அன்று; சூத்திரன் சூத்திரன் அன்று.

இவை எவனிடம் காணப் படுமோ, அவன் பிராமணன்; எவனிடம் காணப்படாதோ அவனைச் சூத்திரன் என்று கருத வேண்டும்.—மகா பாரதம்.

8. ஒவ்வொரு மனிதனுடைய ஜாதியையும் அவன் பிறப்பை வைத்துத் தீர்மானிக்காதே. எந்த ஜாதியைக் குறிக்கும் ஒழுக்கம் காணப் படுகிறதோ அதை வைத்தே ஜாதியைத் தீர்மானிக்க வேண்டும்.

விஷ்ணு பாகவதம்.

9. நல்லொழுக்கம் இல்லாதவனை வேதங்கள் புனித மாக்கி விடா.—வசிஷ்ட ஸ்மிருதி.

10. பிறப் பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப் பொவ்வா
செய்தொழில் வேற்றுமை.யான்.

ஒழுக்க முடைமை குடிமை, இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடும்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டு ஒழுக லான்.

திருக்குறள்

11. சடை முடியும், சாதியும், உயர் பிறப்பும் ஒருவனை பிராமண னாக்கா. உண்மையை உணர்ந்து நன்னெறி நிற்பவனே பாக்கியவான். அவனே பிராம ணன ஆவான்.

ஒருவன் குலத்தாலும் பிறப்பாலும் பிராமணன் ஆக மாட்டான். பெருமை பேசிக் கொள்ளலாம். செல்வம் இருக்கலாம். ஆனால் இவைகளை விட்டு அவா நீத்தவனே பிராமணன் ஆவான்.

தான் யாதொரு குற்றம் செய்யாதிருந்தும் பிறர் தரும் வசையையும், உதையையும், சிறை வாசத்தை யுய் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளும் வீரனே பிராமணன் ஆவான்.—புத்தர்.

172885

சென்னை, கோமளேசுவரன்பேட்டை,
சச்சிதானந்த அச்சுக்கூடம்.

244
2-178

உங்களுக்கு வேண்டிய நூல்கள்.

மகாத்மா காந்தி அருளிச்செய்த இந்திய சுயராஜ்யம்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை மொழி பெயர்ப்பு ...	0	8	0
ஷை சுகவழி (அச்சில்)	0	8	0
பூலோகத்து சப்த அதிசயங்கள் ...	0	2	0
சேலம் தேசபக்தர் காலஞ்சென்ற ராமசுவாமி முதலியார் சரிதை ...	0	2	0
ஈசுர சந்திர வித்யா சாகரர் ...	0	2	0
சத்தியாக்கிரகம்: மகாத்மா அருளிச் செய்தது திரு. பொ. தி. மொழி பெயர்ப்பு	0	6	0
மகாத்மா காந்தி மணி மொழிகள் (அச்சில்)			
சி. சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள், பக்தி மார்க்கம் (அச்சில்) ...	0	4	0
மார்க்கஸ் அரீலியஸ் மணி மொழிகள் (அச்சில்)........			

பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை,

சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.